IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE,

TENKASI.

**OS.No. 406/2023**

**நாள்– 12.06.2025**

**வா.சா.1 திரு. கஜேந்திரன் –** சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்படுகின்றார்.

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

1) பிராதில் குறிப்பிட்டுள்ள முகவரியில் நான் பிறந்ததிலிருந்தே வசித்து வருகிறேன். எங்கள் ஊரில் எங்களுக்கு பரம்பரை சொத்து என்று எதுவும் கிடையாது என்றால் சரியல்ல, உள்ளது. எங்கள் பரம்பரை சொத்தின் மதிப்பு எவ்வளவு இருக்கும் என்றால் மூன்று கோடி ரூபாய் இருக்கும். அதில் என்னுடைய பங்கு தொகை ரூபாய் ஒரு கோடி இருக்கும். என் உடன் பிறந்த சகோதர, சகோதரிகள் 6 பேர் என்றும் அதனால் எனக்கு ஆறில் ஒரு பங்கு பாகம் மட்டுமே கிடைக்கத்தக்கது என்று சொன்னால் சரியல்ல.

2) நான் மார்க்கெட்டில் வைத்துள்ள கடையிலிருந்து ஆண்டு வருமானம் எவ்வளவு பெறுகிறேன் என்றால் 50 – 60 லட்ச ரூபாய் கிடைக்கும். இந்த விவரங்களை எனது வருமான வரி அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். 2017 – 2022 வரையுள்ள வருமான வரி கணக்குகளை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாரா என்றால் தயாராக உள்ளேன். நான் சொன்னதுபோல் எனக்கு ஆண்டுவருமானம்கிடையாது என்றும், வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது கணக்கு வழக்குகளை பராமரிக்க எனக்கு தனியே ஒரு ஆடிட்டர் உள்ளார் என்றால் சரிதான். என்னுடைய பற்று, வரவு கணக்குகள் மற்றும் ஆண்டுவருமான விவரங்களை ஆடிட்டரிடம் தெரிவிப்பது வழக்கம்என்றும், அதை பொறுத்து அவர் வருமான வரி அறிக்கை தாக்கல் செய்வார் என்றால் சரிதான். பிரதிவாதி எனக்கு 40லட்ச ரூபாய் தொகை தரவேண்டியுள்ளது என்ற விவரத்தை

வருமான வரி கணக்கு அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. நான் உண்மையிலேயே பிரதிவாதிக்கு கடன் கொடுத்திருந்தால் அந்த விவரத்தை வருமான வரி அறிக்கையில் காட்டியிருப்பேன் என்று சொன்னால் சரியல்ல.

3) எனது சகோதரர் ஆறுமுகம் கோயமுத்தூரில் ஒரு தனியார் நிறுவனத்தில் மாத சம்பளத்திற்கு பணிபுரிந்து வருகிறார் என்றால் சரிதான். அந்த நிறுவனத்தில் கோழி முட்டைகளை பாதுகாத்தும், பராமரித்து வரும் வியாபாரம் செய்கிறார்கள் என்றால் சரிதான். எனது சகோதரர் பணிபுரியும் நிறுவனத்தில் பிரதிவாதியின் கணவர் தனது தொழில் நிமித்தமாக முட்டைகளை இருப்பு வைத்து விற்பனை செய்துவந்தார் என்று சொன்னால் சரிதான். அதன் மூலமாகத்தான் பிரதிவாதி எங்களுக்கு அறிமுகமானார் என்று சொன்னால் சரிதான். பிரதிவாதியின் கணவர் இறந்த விவரம் கூட வழக்கறிஞருடைய பதிலறிவிப்பின் மூலமாகத்தான் தெரிந்துகொண்டதாக சொல்லியுள்ள நிலையில் பிரதிவாதியின் குடும்பம் எங்களுக்கு நெருக்கமான குடும்பம் என்று பொய்யாக வழக்கிற்காக கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனது சகோதரர் கோயமுத்தூரில் உள்ள நிறுவனத்தில் மாத சம்பளத்திற்கு பணிபுரிந்து வந்த நிலையில், அவர் பிரதிவாதியின் வியாபாரத்திற்காக கடன் கொடுத்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல.

4) 2020 மார்ச் மாதம் முதல் செப்டம்பர் மாதம் வரை கொரோனா காரணமாக லாக்டவுன் விதிக்கப்பட்டிருந்தது என்று சொன்னால் சரிதான். அந்த காலக்கட்டத்தில் பிரதிவாதி என்னை நேரில் சந்தித்து கடன் கேட்டார் என்பது பொய் என்றால் சரியல்ல. எங்களது ஊருக்கும் பிரதிவாதியின் ஊருக்குமிடையே 300 கி.மீ தூரம் உள்ள நிலையில் அவர் எங்களை அணுகியிருக்க வாய்ப்பில்லை என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி தன்னுடைய அலைபேசியிலிருந்தோ, அலுவலக அலைபேசியிலிருந்தோ என்னுடன் ஒருமுறை கூட பேசியது கிடையாது என்றும், இதுவரை பிரதிவாதி என்னை நேரில் பார்த்தது

கூடகிடையாது என்று சொன்னால் சரியல்ல. இந்த நீதிமன்றத்தில் வைத்துதான் பிரதிவாதி என்னை முதன்முறையாக பார்க்கிறார் என்று சொன்னால் சரியல்ல.

5) பிரதிவாதியின் தொலைபேசி எண்களை என்னால் சொல்லமுடியுமா என்றால் எனது அண்ணனின் அலைபேசியிலிருந்துதான் அவர் பேசுவார். எனது அண்ணன் கோயமுத்தூரில் இருந்த நிலையிலும், பிரதிவாதி உடுமலைப்பேட்டையில் வசித்து வந்தநிலையிலும் எனது அண்ணனின் அலைபேசியில் பிரதிவாதி பேசுவார் என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது சகோதரரின் பரிந்துரையின் பேரில் பிரதிவாதிக்கு கடன்கொடுத்ததாக நான் சொல்லியுள்ள நிலையில் எனது சகோதரரை வழக்கில் ஒரு தரப்பினராக நான் சேர்க்கவில்லை என்று சொன்னால் சரிதான்.

6) எனது சகோதரர் பிரதிவாதியின் மீது திருப்பூர் மாவட்ட குற்றப்பிரிவில் ஒரு மோசடி புகார் கொடுத்தார் என்று சொன்னால் அந்த விவரம் எனக்கு தெரியும். எனக்கும் எனது சகோதரருக்கும் தற்போதுவரை சுமுகமான உறவு உள்ளது என்றால் சரிதான். திருப்பூர் மாவட்ட குற்றப்பிரிவில் எனது சகோதரர் கொடுத்த புகாரின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை எண். 4/2022 ஆக பதிவு செய்யப்பட்டது என்றும் அந்த முதல் தகவல் அறிக்கை சென்னை உயர் நீதிமன்றத்தால் quash செய்யப்பட்டது என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியும். உயர்நீதிமன்றத்தில் பிரதிவாதி முதல் தகவல் அறிக்கையை ரத்துசெய்யக்கோரி மனுதாக்கல் செய்தபின்னர், போலியான ஆவணங்களின் மூலம் இந்த அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

7) வா.சா.ஆ.1 பிராமிசரி நோட்டிலும், வா.சா.ஆ.3 ஒப்புகை அட்டையிலும் உள்ள பிரதிவாதியின் கையெழுத்துக்கள் வெவ்வேறானவையாக உள்ளது என்று சொன்னால் சரியல்ல, அவை பிரதிவாதியின் கையெழுத்துதான். வா.சா.ஆ.1 பிராமிசரி நோட்டில் உள்ள கையெழுத்து பிரதிவாதியின் கையெழுத்து கிடையாது என்று சொன்னால் சரியல்ல. மேற்படி பிராமிசரி நோட்டை வல்லுநர்

பரிந்துரைக்கு அனுப்பி ஆய்வு செய்து அறிக்கை பெற எனக்கு ஆட்சேபனை கிடையாது என்று சொன்னால் சரிதான். பிரதிவாதி, தனது பிறந்தநாள் அன்று என்னிடம் கடன் வாங்கியதாக நான் குறிப்பிட்டுள்ள நிலையில் தனது கணவரின் மரணத்திற்குப்பின்னர் பிரதிவாதி பிறந்தநாள் கொண்டாடுவது கிடையாது என்று சொன்னால் சரியல்ல. பொதுவாக, கடன் வாங்குபவர் தான் கடன் கொடுப்பவரின் வீட்டிற்கு சென்று பணம் பெறுவார் என்றும், கடன் கொடுப்பவர் வாங்குபவரின் வீட்டிற்கு சென்று கடன் வழங்குவது கிடையாது என்று சொன்னால் சரியல்ல.

8) எனக்கு வங்கி கணக்குகள் உண்டு என்றால் சரிதான். பிரதிவாதியும் தனது தொழில்நிமித்தமாக வங்கி கணக்குகளை பராமரித்து வருகிறார் என்று சொன்னால் சரிதான். உண்மையிலேயே நான் கடன் கொடுத்திருந்தால் வங்கி கணக்குகளின் மூலமாக பணப்பரிமாற்றம் செய்திருப்பேன் என்றும், உடுமலைப்பேட்டைக்கு சென்று பணத்தை நேரில் கொடுக்க வேண்டிய அவசியம் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. வருமான வரி சட்டப்படி 2 லட்ச ரூபாய்க்கு மேல் யாருக்காவது கடன் கொடுத்தால் அந்த விவரத்தை வருமான வரி அலுவலகத்தில் தெரிவிக்கவேண்டிய பொறுப்பு கடன் கொடுப்பவரை சாரும் என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. உண்மையிலேயே நான் பணம் கொடுத்திருந்தால் நான் வங்கி மூலமாக பணப்பரிமாற்றம் செய்திருப்பேன் என்றும், வருமான வரி அலுவலகத்திலும் அதுகுறித்து அறிக்கை தாக்கல் செய்திருப்பேன் என்றும் சொன்னால் சரியல்ல.

9) பிராமிசரி நோட்டு, கடன் பத்திரங்கள் எவ்வாறு இருக்கும் என்று எனக்கு தெரியும் என்றால் சரிதான். பொதுவாக, பிராமிசரி நோட்டில் வருவாய் வில்லை ஒட்டி அதன் மீது கையொப்பம் செய்து விடுவார்கள் என்றால் சரிதான். பிராமிசரி நோட்டில் ஆவணத்தை எழுதியவர் யார் என்று ஒரு குறிப்பு இருக்கும் என்று சொன்னால் சரிதான். நான் தாக்கல் செய்த வா.சா.ஆ. 1 ஆவணத்தில் வருவாய் வில்லை ஒட்டப்படவில்லை என்றும், ஆவணத்தை தயார் செய்தது யார் என்றும் குறிப்பிடப்படவில்லை என்றும் சொன்னால் சரிதான். நான் தாக்கல்

செய்த வா.சா.ஆ. 1 ஆவணத்தில் உள்ள சாட்சி கையொப்பங்கள் அனைத்தும் எனது உறவினர்கள் மற்றும் நண்பர்களுடையது என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்த வா.சா.ஆ. 1 ஆவணத்தில் உள்ள சாட்சி கையொப்பங்கள் அனைத்தும் எனது ஊரை சேர்ந்த நபர்கள் என்றும், உடுமலைப்பேட்டையை சேர்ந்தவர்கள் கிடையாது என்றும் சொன்னால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.1 ஆவணத்தில் எனது சகோதரர் சாட்சியாக கையொப்பமிடவில்லை என்றால் சரிதான்.

10) பிராதிலும், நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்திலும், பிரதிவாதி சேலத்தில் தனது கணவரின் பெயரில் உள்ள சொத்தினை பராமரிக்க இயலாமல் 11.12.2020ல் விற்றுவிட்டார் என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அந்த சூழ்நிலையில் 2020ம் வருடம் 9ம் மாதம் என்னிடம் பணம் பெறவேண்டிய அவசியம் பிரதிவாதிக்கு இல்லை என்று சொன்னால் சரியல்ல. எனக்கும் எனது சகோதரருக்கும் பிரதிவாதியின் கணவரை 2018ம் வருடத்திலிருந்தே தெரியும் என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். 2018ம் வருடம் மே மாதம் பிரதிவாதியின் கணவர் இறந்தபிறகு, பிரதிவாதியின் மீது உடுமலைப்பேட்டை சார்பு நீதிமன்றத்திலும், கூடுதல் மாவட்ட நீதிமன்றத்திலும் பல்வேறு நபர்கள் பல்வேறு வழக்குகளை பணம் கேட்டு தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். உண்மையிலேயே, எனது சகோதரருக்கும் எனக்கும் பிரதிவாதியின் குடும்பத்துடன் பழக்கம் இருந்திருந்தால் மேற்படி வழக்கு விவரங்கள் அனைத்தும் எங்களுக்கு தெரிந்திருக்கும் என்று சொன்னால் சரியல்ல.

11) பிரதிவாதியின் கணவருடைய கமலம் டிரேடர்ஸ் நிறுவனத்தில் செல்வம் என்ற நபர் பணிபுரிந்துவந்த விவரமும் எனக்கு தெரிந்திருக்கும் என்றால் சரியல்ல. எனது சகோதரர் கோயமுத்தூரில் பணிபுரிந்த நிறுவனத்தில் இருப்பிலிருந்த கோழி முட்டைகளை வெளி மாநிலங்களுக்கு விற்பனை செய்த வரவு செலவுகள் எனது சகோதரருக்கும் எனக்கும் தெரியும் என்றால் சரியல்ல.

அந்த வரவு, செலவுகளை தெரிந்து கொண்ட எனது சகோதரர் பிரதிவாதியின் நிலையை தெரிந்துகொண்டு அவரிடமிருந்து பணம் பறிக்க முயற்சி செய்தார் என்றால் சரியல்ல.

12) எனது சகோதரர் காவல்துறையில் கொடுத்த பொய்ப்புகார் ரத்து செய்யப்பட்டுவிடும் என்ற காரணத்தினால் பிரதிவாதியை பழிவாங்கவேண்டும் என்பதற்காக என் மூலமாக இந்த பொய்யான வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் சொன்னதுபோல் பிரதிவாதி என்னிடமிருந்து 40 லட்ச ரூபாய் பணம் பெறவில்லை என்றும், அவர் பிராமிசரி நோட்டில் கையொப்பமிடவில்லை என்றும், மேற்படி பிராமிசரி நோட் என்னால் பொய்யாக உற்பத்தி செய்யப்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல. என்னுடைய வழக்கு தள்ளுபடி செய்யப்படத்தக்கது என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

MANOJKUMAR S

Digitally signed by MANOJKUMAR S
Location: Additional District and Sessions Judge, Tenkasi